Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE ATHOOR

**C.C.No.160/2022**

**Deposition of PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில் குமார் | ஜாதி | : |
| த/பெ | : | தொழில் | : காவல் ஆய்வாளர் செம்பட்டி காவல் நிலையம் |
| கிராமம் | :ஆத்தூர் | சமயம் | : |
| தாலுகா | : ஆத்தூர் | வயது | : /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.03.2023.

(Accused A1 and A2 Present. A3 Absent. Filed petition U/s.317 Cr.P.C. allowed)

முதல் விசாரணை

நான் தற்போது செம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.11.2021 அன்று காலை 05.00 மணிக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி நிலைய பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் நாராயணன் என்பவர் செம்பட்டி புல்வெட்டி கண்மாய் சென்று அங்கு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது சந்தேகத்தின் பேரில் வந்த TN 37 CE 2300 என்ற பதிவெண் கொண்ட Maruthi Ertica காரை நிறுத்தி சோதனை செய்த போது அதில் இருந்த அரசால் தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்கள் இருப்பதாகவும் சோதனை செய்ய அனுமதிக்கமறுக்கிறார்கள் என்றும் மிரட்டுகிறார்கள் என்றும் சொன்னதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்று அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை எதிரிகள் வைத்திருப்பது உறுதியானவுடன் அவர்களை கைது செய்து எதிரி வெங்கடேஷ் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சியம் இல்லாததால் போலீசார் சாட்சிகள் பசுபதி தலைமை காவலர் 885, ராஜபாண்டி முதல் நிலை காவலர் 1001 ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து அதன் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த கணேஷ் புகையிலை 12 மூட்டைகள், பான்மசாலா 6 மூட்டைகள் வைத்திருந்த மூட்டைகளையும் மேற்கண்ட எதிரிகள் பயன்படுத்திய வாகனத்தையும் கைப்பற்றி எதிரிகளை கைது செய்து தனிநபர் சாட்சியம் இல்லாததால் போலீசார் சாட்சிகள் பசுபதி தலைமை காவலர் 885, ராஜபாண்டி முதல் நிலை காவலர் 1001 ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைக்கப்பட்டு எதிரிகள் வெங்கடேஷ், சுல்தான் இப்ராகிம், பைசுல் ரகுமான் ஆகியோர்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். மேற்கண்ட எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தடை செய்யப்பட்ட 1. கணேஷ் புகையிலை 12 வெள்ளை சாக்குகளில் நிரப்பட்டவை -

அ.சா.பொ.1 ஆகும், 2.விமல் பான்மசாலா 5 வெள்ளை சாக்கு பைகளில் நிரப்பப்பட்டவை - அ.சா.பொ.2 ஆகும், 3. விமல் பான்மசாலா 1 வெள்ளை சாக்கு பையில் நிரப்பப்பட்டவை - அ.சா.பொ.3 ஆகும் , 4. TN 37 CE 2300 என்ற பதிவெண் கொண்ட Ertica car - அ.சா.பொ.4 ஆகும். மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகும். மேற்கண்ட சான்று பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். மேற்கண்ட படிவம் அ.சா.ஆ.4 ஆகும். பின்பு சாட்சிகள் பசுபதி, ராஜபாண்டி, சார்பு ஆய்வாளர் நாராயணன் ஆகியோரை விசாரணை செய்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 353, 506(ii), இதச உடன் இணைந்த 6(a) 24(1) COTPA ACT படி 20.12.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் செம்பட்டி முதல் வத்தலகுண்டு ரோட்டில் புல்வெட்டி குளம் அருகில் ரோட்டின் கிழக்கிலும், மேற்கிலும் கடைகள் உள்ளது என்றால் அது தவறு. ரோட்டின் கிழக்கு பக்கம் அய்யாத்துரை கடை , மணிமாரன் கடை அதன் எதிர்புறம் கூலம்பட்டியை சேர்ந்தவர் கடை உள்ளது என்றால் அது தவறு. புல்வெட்டி கண்மாய் எதிர்புறம் பட்டாசு கடை உள்ளது என்றால் சம்பவ இடத்தில் இருந்து 200 மீ தொலைவில் உள்ளது. சம்பவ இடம் புல்வெட்டி குளம் அருகில் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பாக எந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ தேதியில் வாகன தணிக்கை செய்தது முதன் முதலில் 05.00 மணி என்று வழககில் குறிப்பிடப்பட்டுள்ளது மேற்கண்ட வாகன தணிக்கையை செம்பட்டி காவல் நிலைய போலீசார் முதலில் செய்யவில்லை என்று சொன்னால் அது தவறு. எதிரிகள் அந்த வாகனத்தை எங்கிருந்து ஓட்டி வந்தார்கள் என்ற விபரத்தை விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சார்பு ஆய்வாளர், எதிரிகள் மிரட்டியதாக கூறிய நிலையில் போலீசார் புகார் ஏதேனும் கொடுத்துள்ளார்களா என்றால் வாய்மூலமாக கொடுத்த புகார் தான். எதிரிகள் எந்த இடத்தில் தடை செய்யப்பட்ட பொருட்களை வைத்திருந்தார்கள் என்று தனிநபர் சாட்சி யாரும் எங்களிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்ததாக எந்த புகாரும் எங்களிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தடை செய்யப்பட்ட பொருட்கள் எத்தனை மூட்டைகள் மற்றும் அதன் கொள்ளளவு குறித்து தணிக்கைக்கு சென்ற போலீசார் என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது தவறு. மூட்டைகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளனர். அத்தாட்சியில் சாக்குபையில் இருந்த பொருட்களின் மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது எதன் அடிப்படையில அதன் மதிப்பை நிர்ணயம் செய்தோம் என்றால் அதன் உள்ளிருந்த ஒவ்வொரு பாக்கெட்டிலும் விலை குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அதன் கூட்டல் தொகையை மதிப்பாக குறிப்பிட்டிருந்தோம். இந்த வழக்கில் போலீஸ் சாட்சிகள் தவிர தனிநபர் சாட்சிகள் யாரும் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். பொருட்களை கைப்பற்றும்போதும் போலீஸ் சாட்சிகள் தவிர தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஓட்டி வந்த வாகனத்தின் உரிமையாளரை இந்த வழக்கில் விசாரணை செய்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பெறும் போதும் தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் பெறப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் இந்த வழக்கில்

பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் அது தவறு. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

P JAISANKAR

Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate
Athoor